முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 5 | 3-4-59 | வெள்ளி | ஒலி: 45

திருவாளர் தேசீயம் பிள்ளை!

5

உருண்டு கொண்டிருக்கும் தேசியம் பிள்ளையின் மூக்கு சப்பையாகப் போகுமளவுக்குப் பலமான இடி கொடுக்கிறது, மதுரைப் படி!

"அம்மவோ! வலிதாங்க முடியவில்லையே!" என்று கதறுகிருர். வாயை மூடுவதற்குள் உடுமலைப் படியில் உருளுகிருர். திறந்திருந்த வாயில் உதட்டுக்குமுன் நீட்டிக் கொண்டிருந்த இரண்டொரு பற்கள் கீழே விழுகின்றன.

பணப்படி யொன்றில் கையை ஊன்றி ஆகா! தப்பினேன் "கோபிப்படி" — என்று பெருமூச்சு விடுகிருர். அடுத்தது பாசிப்படி! பெரிய வழுக்கல்! விழ்ந்தார் — வீழ்ந்தார் — விருதுநகர்ப் படியில்!

தலையிலிருந்து ரத்தம் குபுகுபுவெனக் கிளம்பிற்று.......கால் முறிந்தது! உடம்பெல்லாம் ஊமைக் காயங்கள்!

திருச்சிப் படியில் உருண்டவாறு — வந்த இடத்தைத் திரும்பிப் பார்த்தார். நெஞ்சில் முட்டியது தஞ்சைப்படி!

பிரக்ஞை தவறிவிட்டது. கை கால்கள் செயலிழந்து விட்டன. இருதயம் நின்று விடும்போல் தோன்றியது.

— மிகக் கஷ்டப்பட்டுக் கண்களைத் திறக்க முயற்சி செய்தார். விழித்துப் பார்த்தார். பலகணி வழியாக 'உதய சூரியன்' ஒளிக் கரங்களை நீட்டினன். "கண்டதெல்லாம் கனவு" என முணுமுணுத்துக் கொண்டார்! "கனவு பலித்து விடுமோ?" என்று சந்தேகம் வேறு! சுற்றுமுற்றும் பார்த்தார். அவரது மனைவி காலைக் காப்பியுடன் எதிரே வந்து நின்ருள்.

"என்ன ஒருமாதிரி யிருக்கிறீர்கள். முகமெல்லாம் மாறியிருக்கிறது! ஏதோ பீதி அடைந்ததுபோல் தெரிகிறதே?" என்று கேட்ட தன் மனைவியின் கையைப் பிடித்துக் கட்டிலில் உட்கார வைத்தவாறு, காப்பியை வாங்கி சுடச்சுட அருந்தினர்.

சூடான காப்பி அளித்த சுறுசுறுப்புக்குப் பின் "ஆண்டவனே! நான் கண்டதெல்லாம் கனவாகவே முடிய வேண்டும்! எதுவும் நடந்துவிடக் கூடாது என்னப்பனே!" என்று அங்கு மாட்டப்பட்டிருந்த பிள்ளையார் படத்தைப் பார்த்துக் கரங்கூப்பித் தொழுதார். வேலைக்காரச் சிறுமி அன்றைய தினசரிப் பத்திரிகைகளுடன் ஓடிவந்தாள். தேசியம் பிள்ளை அவசர அவசரமாக அப்பத்திரிகைகளைப் பிரித்துப் பார்த்தார்.

"அய்யோ!" — அவரை அறியாமலே அலறிவிட்டார்.

"என்ன? என்ன? யாராவது செத்துவிட்டார்களா?" — அவரது மனைவி ஆவலோடு கேட்டாள்.

"இல்லை! கோவை, மதுரை, விருதை, எல்லா இடங்களிலும் காங்கிரஸ் படுதோல்வி! படுதோல்வி!! வெட்கக்கேடு! வெட்கக்கேடு!!" என்று நாத்தழுதழுக்கப் புலம்பினர் தேசியம் பிள்ளை.

"நல்லாத் தோற்றுப் போகணும்! செம்மையா அடிவாங்கணும் உங்களதுகாங்கிரஸ்!" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினள் மனைவி.

"ஏண்டி, உனக்குப்பொருமை? ஏன் தோற்க

[தொடர்ச்சி பக்கம்—4]

மனிதனின் கதை

பி.சி. கணேசன்

உதயசூரியன்

அன்புள்ள மாதவி,

31.

உலக வரலாற்றில் — மனிதனின் கதையில் எந்தெந்த நாடுகளைப்பற்றியெல்லாமோ சொல்லி வந்த நான் நவீன உலகில் மாபெரும் சக்திகளாக விளங்கி, சென்ற யுத்தத்தின் போக்கையே நிர்ணயித்த இருபெரும் நாடுகளைப்பற்றிச் சொல்லவில்லையே எனக் கேட்டிருக்கிறாய். பண்டு அவை பாரில் வகித்த இடம் என்ன? பூகோள அமைப்பிலும் மக்களின் உழைப்புத்திறன், பண்பாடு போன்ற பிறவற்றிலும் ஒற்றுமை கொண்டு விளங்கும் அந்நாடுகளின் புராதன வரலாறு மனிதனின் கதையில் இடம் பெறும் அளவுக்கு முக்கியத்வம் இல்லாதவையா? இப்படிப் பல கேள்விகள் எழுப்பியுள்ளாய்!

நான் உனக்கு எழுதும் கடிதங்களை நீ எவ்வளவு கூர்ந்து படித்து வருகிறாய் என்பதையே உன்னுடைய கேள்விகள் விளக்குகின்றன. பிரிட்டனும் ஜப்பானும் சிறிய தீவுகளால் ஆன நாடுகளே ஆயினும், நவீன உலகில் அவை பெற்றிருக்கும் முக்யத்வத்தை யாரும் குறைத்து மதிப்பிடமுடியாது. பிரிட்டன் படிப்படியாக வல்லரசாக வளர்ந்த நாடு. ஜப்பான் இந்த நூற்றாண்டில், மேற்கத்திய கல்வியாலும் மக்களின் இடையறா உழைப்பாலும், திடீரென்று வல்லரசாக உருவெடுத்து ஏகாதிபத்ய ஆசையால் இரண்டாம் உலகப் பெரும் போரில் குதித்து, அணுக்குண்டுகளின் அழிவுச் சக்திக்கு முதல் இலக்காகி, மீண்டும் புது வாழ்வு பெறும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நாடு. இந்த இரு நாடுகளின் பண்டை நிலையினை நீ அறியவேண்டியது அவசியமே! வெறும் நிலப்பரப்பு மட்டுமோ, அல்லது ஜனத்தொகையோ ஒரு நாட்டினை சக்தி படைத்ததாகச் செய்யவில்லை என்பதற்கு இந்த இரண்டு நாடுகளுமே நல்ல சான்றாகும். இந்த இரு நாட்டு மக்களிடத்திலும் காணப்படுகின்ற நாட்டுப் பற்று, மிக உயர்ந்தது; தன்னலக் கலப்பற்றிருப்பது!

ஜப்பானின் புராதன வரலாற்றோடு இணைந்து காணப்படுகின்ற மற்றொரு நாடு கொரியா. மதம், கலை, கலாச்சாரம் ஆகிய வாழ்வியல் துறை அனைத்திலும் சீனாவிடமிருந்தே கொரியாவும் ஜப்பானும் பாடம் கற்றுக்கொண்டன. ஜப்பான் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அந்நியரின் தொடர்பை விரும்பாமல் தனித்தே வாழ்ந்தது. உலகின் வேறு பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் எதுவும் ஜப்பானைச் சிறிதும் பாதிக்கவேயில்லை. வளரும் சக்திகளிடமிருந்து துண்டித்துக் கொண்டு தனிவாழ்வு வாழ்ந்த ஜப்பான், வெகுகாலம் வரை நாகரிகம் அடையாத பிற்போக்கு நாடாக விளங்கியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஜப்பான் தீவுகளின் மீது படையெடுக்க அவ்வப்பொழுது சில முயற்சிகள் நடந்ததுண்டு. அந்த முயற்சிகள் எதுவும் வெற்றிபெறவில்லை.

இன்றுள்ள ஜப்பானியர்களின் முன்னோர்கள் கொரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே, ஜப்பானியர்களை மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கொள்ளுதலே பொருந்தும்.

ஜப்பானிய ராஜ்யத்தின் பழைய பெயர் யாமடோ (Yamato) என்பது. யாமடோ ராஜ்யத்தை ஜிங்கோ (Jingo) என்ற பெயருடைய பெண்ணொருத்தி கி. பி. 500-ல் ஆட்சி செய்தாள். இவள் பேரரசி (Empress) என்ற பட்டத்துடன் ஆண்டாள், ஜிங்கோ, ஏகாதிபத்ய ஆட்சிகொண்ட சர்வாதிகாரியாகத் திகழ்ந்தாள். இவள் பெயரின் அடிப்படையில்தான் ஏகாதிபத்ய ஆசையை 'ஜிங்கோயிசம்' (Jingoism) என்று அழைக்கும் ஆங்கிலச் சொல் உருவாகியிருக்கவேண்டும்.

கி. பி. 500-க்குப் பிறகுதான் புத்தமதம் முதல் முதலில் ஜப்பானில் அடியெடுத்து வைத்திருக்கவேண்டும். ஏனெனில் கி. பி, 522-ல் வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி காணப்படுகிறது. கொரிய மன்னன், அந்த ஆண்டில்தான் ஜப்பான் நாட்டுக்கு தங்கத்தாலான ஒரு புத்தர் சிலையையும், புத்தத் துறவிகளையும் அனுப்பிவைத்தான். இதுதான் ஜப்பான் நாட்டில் புத்தமதத்தின் கால்கோள் விழாவாக இருந்திருக்கவேண்டும்.

புத்தமதம் இறக்குமதி செய்யப்படுமுன் ஜப்பானியர் மதசார்பற்ற வாழ்வு வாழவில்லை. அந்த நாட்டிலேயே பிறந்த ஒரு மதத்தை அவர்கள் தழுவி வந்தார்கள். அந்த மதத்தின் பெயர் ஷின்டோ (Shinto) என்பது. ஷின்டோ என்ற ஜப்பானியச் சொல்லுக்கு 'கடவுள்களின்வழி' என்பது பொருள். ஆகவே ஷின்டோ மதம் தெய்வீக வாழ்வைப் போதிப்பதாகச் சொல்லலாம். இயற்கை வழிபாடும் முன்னோர்கள் வழிபாடும் அம்மதத்தின் அடிப்படைக் கொள்கைகள். இது ஓரளவுக்குத் தமிழர் நெறியை ஒத்திருப்பதை நீ காணலாம். ஷின்டோ மதம் மரணத்துக்குப் பின்னுள்ள மக்கள் வாழ்க்கையைப்பற்றிச் சொல்லவில்லை. புராதன மதமாயிருந்தும் கற்பனைத் தத்துவங்களை ஷின்டோ மதம் சொல்லாதது விந்தையே! எந்த அதிசய நிகழ்ச்சியையும் சுட்டிக்காட்டி ஷின்டோ மதம் தன் கொள்கையை வலியுறுத்தவில்லை. தலைவர்களிடம் விசுவாசமும் நாட்டிடம் உண்மையான பற்றும் கொண்டிருக்க வேண்டுமென்று அம் மதம் பேசுகிறது. இக் கொள்கையை அது சொல்லுவதாலேயே ஜப்பான் நாட்டுப் பிரபுக்களும், ஜப்பானை ஆண்ட மன்னர்களும் ஷின்டோ மதத்துக்கு நிறைய ஆதரவளித்துப் போற்றினர். இதனால்தான் இன்றளவும் ஜப்பானியர்கள் தங்கள் மன்னர்களைத் தெய்வம் என்று போற்றுகின்றவர்களாயும், நாட்டுக்காக உயிரையும் பொருட்படுத்தாது கொடுக்கின்ற தியாக உள்ளம் படைத்தவர்களாகவும் விளங்குகிறார்கள். புத்த மதம் ஜப்பானில் செல்வாக்குப் பெற்றிருந்தாலும் ஷின்டோ மதம் அதற்ிணையான செல்வாக்குடன் இன்றும் ஜப்பானில் இருந்து கொண்டு வருகிறது.

வெகுகாலம் வரை, யாமடோ எனப் பெயர் பெற்ற ஜப்பானிய ராஜ்யத்துக்கு நாரா (Nara) தலைநகரமாக விளங்கியது. மிக்காடோ (Mikado) எனப் பட்டம் பூண்ட ஜப்பானியச் சக்ரவர்த்திகள் சர்வ சக்தி வாய்ந்தவர்களாக இருந்தார்கள். பிரபுவம்சத்திலிருந்து முடிசூட்டிக் கொண்ட இந்த மன்னர்கள் தெய்வ ஆக்ஞைபெற்றவர்களாக மக்களால் கருதப்பட்டார்கள். இவர்கள் சூரியனின் வழித்தோன்றல்கள் என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்தது. இவ்வளவு ஆற்றல் படைத்த மன்னர்களில் பலர், ஜப்பானியப் பிரபு வம்சங்களால் ஆட்டிப்படைக்கப்பட்டனர். ஒரு அரசன் சந்ததியின்றி மாண்டு போனால் அவனுடைய வாரிசை நிர்ணயிக்கும் உரிமைகூட இந்தப் பிரபுக்களிடம் இருந்தது. ஆகவே சில பிரபுக் குடும்பங்களே பலகாலம் வரை மன்னனின் பெயரால் நாட்டை ஆண்டன.

ஜப்பான் நாட்டு ஆட்சியைத் தன் கைக்குள் போட்டுக் கொண்ட முதல் பிரபுக் குடும்பம் சோகா பிரபுக் குடும்பமாகும் (Soga Family). அக் குடும்பத்தின் மதம் புத்த மதம். சோகா குடும்பத் தலைவர்களில் ஒருவனான ஷோடுகு டெய்ஷி (Shotuku Taishi), ஜப்பானிய வரலாற்றில் குறிப்பிடத் தக்கவன். அவன் பௌத்த நூல்களை ஐயந்திரிபறக் கற்றவன். சிறந்த கலைஞன். சீன நாட்டுச் சிந்தனையாளன் கன்ஃபூஷியசின் போதனைகளில் நல்ல மரியாதை கொண்டவன். சீன நாட்டில் நல்லாட்சியை நிறுவ கன்ஃபூஷியஸ் கையாண்ட வழிகள் அவன் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன, ஒழுக்க அடிப்படையில் அரசியலை அமைத்து, அரசாங்கத்தையும் நிறுவ முயற்சி செய்தவன் ஷோடுகு டெய்ஷி! பிளவுபட்டு நின்ற பல்வேறு ஜப்பானியத் தலைவர்களையும் குடும்பங்களையும் ஒன்று படுத்தி, ஜப்பானியச் சக்ரவர்த்தியின் ஆணையை அவர்கள் ஏற்றுக்கொள்ளச் செய்வதில் பெருமுயற்சி செய்து டெய்ஷி வெற்றியும் கண்டான்! அவன் முயற்சி ஜப்பானிய ராஜ்யத்தைப் பலமான அஸ்திவாரத்தின்மேல் அமைத்தது. இது நடந்தது சுமார் கி. பி, 600-ல் என்று சொல்லலாம்.

அதற்கு பின் சில ஆண்டுகளில் சோகா குடும்பம் செல்வாக்கிழந்தது. காகடோமி (KaKatomi) என்ற மற்றொரு பிரபு அரசியலில் செல்வாக்குப் பெற்றான், இப்படி, மன்னன் அரியணையில் இருந்தாலும் அரசியல் அதிகாரம் பிரபுக்களிடையே கைமாறிக்கொண்டிருந்தது.

சூரியனுக்கும் ஜப்பானிய மக்களுக்கும் பலவிதங்களில் உறவு படுத்திப் பேசுவதுண்டு. ஜப்பானிய மன்னர்கள் சூரிய குலத்தில் வந்தவர்கள் எனப் பாராட்டப்பட்டனர். சீனச் சக்ரவர்த்தி ஜப்பானிய ராஜ்யத்தை 'சூரியோதய சாம்ராஜ்யம்' எனப் பெயரிட்டு அழைத்தான். உதய சூரியன் தோன்றும் நாடு என ஜப்பானியர் தங்கள் நாட்டைப் பற்றிப் பெருமை கொள்ளுகின்றனர். அவர்களுடைய கொடியிலும் உதயசூரியன் சின்னமாக அமைந்துள்ளதில் வியப்பில்லை!

ஜப்பானியரின் பண்புக்கேற்ற சின்னமே உதயசூரியன்! இருள் கவிந்த காலங்கண்டு இதயம் கலங்காமல், இருள் கிழித்து வெளிக்கிளம்பும் உதய சூரியனாகவே அவர்கள் முயற்சிகள் வெற்றுபெற்றுள்ளதை அந்நாட்டு வரலாறு தெள்ளத் தெளிவாக நமக்கு எடுத்துக்காட்டுகிறது. உழைப்பும் உற்சாகமும் ஜப்பானியருடன் கூடப்பிறந்த குணங்கள். பிறரிடமிருந்து வெகு எளிதில் அவர்கள் விஷயங்களைக் கிரகித்துக்கொள்ளுகின்றனர். பிற்போக்காக இருந்த ஜப்பானிய நாடு, மேற்கு நாகரிகங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்ட உடனேயே, விஞ்ஞானம் – தொழில் ஆகிய துறைகளில் வளர்ந்து, பிரிட்டனுடன் போட்டியிடும் அளவுக்கு உலக மார்க்கெட்டைப் பிடித்தது, இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். உண்மையான நாட்டுப் பற்றுடன், 'டாய்–நிப்பான் (Dai-Nippon), அதாவது உதய சூரியன் நாடு என்று தங்கள் நாட்டைப் பெருமையுடன் அழைத்துக்கொண்டு, கடமை மறவாமல், கண்ணியம் தவறாமல், கட்டுப்பாடு குலையாமல் ஜப்பானியர் உலக அரங்கில் பீடு நடை போடுவது, நமக்கெல்லாம் நல்லதோர் படிப்பினையாகும்.

பரப்பளவு சிறியது!

மக்கள் தொகை குறைவு!

ஆனாலும் ஜப்பான் ஒரு வல்லரசு!

இதைமறந்துவிடாதே, மாதவி! உதய சூரியன் உனக்கும் எனக்கும் சொல்லிக்கொடுக்கும் பாடம் இதுதான்.

அன்புள்ள,

அகத்தியன்.

★
★★



வெள்ளி 3—4—59 சென்னை

சவப் பெட்டி!

"பிரிவினை வாதிகள் நரிக்குணம் கொண்ட நயவஞ்சகர்கள்! சாதுகளாம் இந்நாட்டு மக்களே! இங்கே கேடுகளைக் களைவோம் எனச் சொல்லி, உங்களை ஆடுகளாய் மோதவிட்டு, நடுவில் ஓடுகின்ற இரத்தத்தைக் குடிக்கும் கொடியவர்களை விரட்டுவீர்!"

—உடைப்பிட்ட மூக்கிலிருந்து வழிகின்ற இரத்தத்தைத் துடைத்து—மூடப்பட்ட மூக்காடுக்கிடையே வஞ்சகச் சிரிப்பைக் காட்டி—'ஆகவே வாக்களிப்பீர் காங்கிரசுக்கே!' என்று இன்னும் வருகிறார்கள், 'ஏக இந்திய'த் தூண்கள்!

"தெற்கு புறக்கணிக்கப்பட்டதாம்—புலம்புகிறார்கள், புத்தித் தெளிவற்றவர்கள்! அந்த அபாயச் சின்னங்களின் அலறலுக்குச் செவி மடுக்காதீர்! உங்களைச் சிரித்த முகத்தோடு வாழ வைக்க டில்லியால்தான் முடியும்! ஆகவே, எதிர்ப்பை கெல்லி எறிவீர்! வாழத்தான் செய்கிறோம் எனச் சொல்லித் துரத்துவீர்!"

—அடிமை நுகத்தடியை அள்ளியெடுத்து மாட்டிக் கொள்ளும் மாட்டுப் பெட்டிக்காரர்களின் முழக்கமும் இதுதான்!

வடக்கால்தான் வாழ்கிறதாம் தெற்கு; வளம் பல பெறுகிறதாம் இன்று!

காவடி எடுக்கும் காங்கிரஸ் நண்பர்களே! வடக்கின் சேவடி தொழுது வாழும் ஆவடித் தோழர்களே! வடக்கால் வாழுகின்ற தெற்கின் வளமனைத்தும் உங்கள் கற்பனைக் கண்களுக்கு மட்டும்தான் தெரிகிறதா?

பசியெனத் துடிக்கும் பச்சிளஞ் சிசுவிடம் புசியென எடுத்துக் கொடுக்கிறாள் மண்ணை—வறுமையால் நசித்துப்போன அன்னை! அதைத் தடுத்து நிறுத்தி, 'என் தங்கம் நீகர்ச் செல்வனை பட்டினியில்லா உலகிற்கு இட்டுச் செல்கிறேன்' என்று கட்டியணைத்துக் கிணற்றுக்குள் விழுகிறான் தந்தை! இதுதான் நீங்கள் காணுகின்ற வளமா?

தொல்லைகளின் முடிவிலே பிள்ளையை விற்போர்—மானத்தை விற்றுத் திருவோடு தூக்குவோர்—அந்தோ கேவலமே; அதனினும் கோரமாம் கற்பையே விலைகூறித் திரியும் மகளிர் கூட்டம்—இத்தகைய வியாபாரிகளிடத்திலா 'வடநாட்டுச் செல்வாக்கு' என்ற ஊசிப்போன சரக்கை விற்கப்போகிறீர்கள்?

பதவி மதுவருந்தி, போதைத் தெளிவற்றுத் திரியும் உங்கள் கண்களுக்கு இவைகள் மறைக்கப்பட்டிருக்கலாம்; ஆனால் 'வளமெங்கே; வாழ்வெங்கே?' என்று கங்கைத்தீரம் நோக்கி ஏக்கப் பெருமூச்சு விடுகின்ற ஏமாளிகளின் விழிகள் மூடிக்கொள்ளவில்லையே, இன்னும்!

பஞ்சடைந்துபோன அந்தப் பராரியின் கண்கள்—வடக்கிடம் தஞ்சமெனத் தாசர்களாய் மாறிவிட்ட உங்களுக்கும் தெரியாத உண்மைகளைப் புரிந்து கொண்டுவிட்டன!

ஒன்றல்ல; இரண்டல்ல; மூடிமறைத்தாலும் முடைநாற்றம் வீசுகின்ற சாக்கடையைப்போல், வடக்கின் வஞ்சகம் இன்று நன்கு புலப்படுகிறது. அந்த சதிப் பட்டியலின் சமீபத்திய செய்தி இது:

'தேசியமயமாக்குகிறோம் ஆயுள் இன்ஷ்யூரன்சை என்று சொல்லிக் கொண்டு **1956**—ம் ஆண்டு செப்டம்பர் முதல்நாள், **245** தனிப்பட்ட கம்பெனிகளைத் தன் கைப்பிடியில் கொண்டு வந்தது மத்திய அரசு! இன்ஷ்யூரன்ஸ் நிதி அரசாங்கத்தின் கைவசம் இருந்தால், அந்தத் தொகையை நாட்டு வளம் செழிக்க ஈடுபடுத்த முடியும்'—என்றும் இந்தச் செயலுக்கு விளக்கம் தரப்பட்டது.

வழியும் விழி நீரையே சுறுசுறுப்பூட்டும் பானமாகக் குடிக்கும் மக்கள், நல்வழி பிறக்க இதுவும் வகை செய்யாதாவென்று காத்திருந்தனர். இன்ஷ்யூரன்ஸ் நிதித் தொகை கோடிக் கணக்கில் குவியும்; வாடி வதங்கும் நம்முடைய வாழ்க்கை நிலையை மாற்றும்—என்று இந்நாட்டு மக்கள் கனவு கண்டார்கள்!

அவர்களின் கனவோ — அரசாங்கத்தின் கணக்கோ வீண் போகவில்லை! இன்ஷ்யூரன்ஸ் தேசியமயமானதிலிருந்து பதினாறு மாதகாலத்தில் கிடைத்த நிதி ஏராளம்! அத் தொகையிலிருந்து **69** கோடி **14** லட்ச ரூபாயை நாட்டு வளத்திற்காகவும் முதலீடு செய்திருக்கிறார்கள்!

'அப்படியா' என்று அகல வாய் திறப்பான் இங்கே வாடுகின்ற அப்பாவி! இந்தப் பரிதாபத்துக்குரியவனின் விழிகளுக்கு அந்தப் பெருந் தொகையின் துளிதான் காட்டப்பட்டிருக்கிறது! இந்தக் கொடுமை நிறைந்த செய்தியைப் பாராளுமன்றத்திலே பூரிப்போடு வெளியிட்டிருக்கிறார்கள்!

முதலீட்டுத் தொகையின் பெரும் பகுதியை முதலையைப்போல் விழுங்கிவிட்டது, வழக்கம்போல் வடக்கு! வீசியெறியப்பட்ட எலும்புத் துண்டைப்போல் சிறுதொகையைப் பெற்றிருக்கிறது, தெற்கு!

அந்த முதலீட்டுத் தொகையின் மூன்றில் இரண்டு பகுதியை பம்பாய்க்கும், மேற்கு வங்காளத்திற்கும் கொட்டியழுதிருக்கிறார்கள், அந்தப் பகுதி மக்கள்தான் வாழப் பிறந்தவர்கள், என்ற மோசக் கருத்தால்!

பம்பாய்க்கு 25·87 கோடி!
மேற்கு வங்காளத்திற்கு 23·17 கோடி!

வறுமையும் வாழமுடியாமையும் சூறாவளியாய்ச் சுழற்ற — வடக்கின் வஞ்சகச் செயல் வெட்டி வைத்திருக்கும் சவக்குழியில் தானே விழுகின்ற இந்தத் தென்னகத்தாருக்குக் கிடைத்திருப்பது என்ன தெரியுமா? அகில இந்திய ரீதியிலே இயங்கி வருகின்றது இன்ஷ்யூரன்ஸ் அமைப்பு—ஆனால் அதன் நிதித் தொகையை முதலீடு செய்வதில் வடக்கத்தி அரசு செய்திருக்கிற மோசத்தைக் கவனியுங்கள்.

தமிழ்நாட்டுக்கு 2·43 கோடி!

ஆந்திரம், கேரளம், கன்னடம்—ஆகிய மூன்று மாநிலங்களுக்குமாகச் சேர்த்து மூன்றரைக் கோடிக்கும் குறைவான தொகை!

69 கோடியே **14** லட்ச ரூபாயில் **38** சதவீதம் பம்பாய்க்கு; **32** சதவீதம் மேற்கு வங்காளத்திற்கு; மூன்றரை சதவீதம் ஏழைத் தமிழகத்திற்கு!

இத்தகைய புள்ளி விபரங்கள்—கொள்ளைக் கூட்டத்தினும் கொடியோராக மாறிவிட்டார்கள் நம்மை ஆளவந்தவர்கள் என்ற உண்மையை எடுத்துக்காட்டவில்லையா?

திட்டங்கள் ஆயிரம் வடக்கில்; சதித் திட்டங்கள் அநேகம் தென்னகத்தின் வீழ்ச்சிக்கு!

அணைக்கட்டுகள் ஏராளமாகத் திறக்கப்படுகின்ற விந்தியத்திற்கு அப்பால்; அணைவுடைத்த வெள்ளமெனப் பாய்கின்ற இத் திருவிடத்து மக்களின் விழிநீரைத் தடுக்க நாதியில்லை!

ஏனென்று கேட்க நாமெழுந்தாலோ, தேளாகக் கொட்டுகிறார்கள் தேசியத் தோழர்கள்; வேலெனத் தைக்கும் வார்த்தைகளை வீசுகிறார்கள்!

விடுதலைப் பண்பாடி உலவுகின்ற திராவிட முன்னேற்றக் கழகம் சவப்பெட்டி செய்கிறது என்கிற காங்கிரஸ் தோழனே! உன்னுடைய நல் வாழ்வுக்கும், உரிமைக்கும் அந்த தயாராகிறது சவப்பெட்டி என்பதை மறந்துவிடாதே!

வடநாட்டிலே வளம் காண்கிறார்கள்; வாழ்ந்துகெட்ட தமிழகத்தார் கண்களிலே குளம் காண்கிறார்கள்!

தொகையனைத்தும் அங்கேயே—எனக் குமுறி எழுந்தால், பகை காட்டிப் பாய்கின்ற பாரதப் பித்தர்களே! இதுதான் தெற்கும் வாழ்கின்ற அழகா?

பதில் சொல்லமுடியாத பச்சோந்திகளே! இதற்காவது பதில் சொல்லுங்கள்! பாசப் பிணைப்பென்று நம்மைக் கட்டியணைத்துக் கழுத்தை நெறிக்கும் அந்த வடக்கத்தியாரின் தொடர்பு இனியும் நமக்குத் தேவைதானா?

'ஆம்' என்று அடங்கிக்கிடக்கப் போகிறீர்களா? அல்லது ஆர்த்தெழுந்துவிட்ட விடுதலைப் பெரும் படையில் ஒன்றாகப் போகிறீர்களா?

தேசியம் பிள்ளை...

[முதல் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும் காங்கிரஸ்? சொல்லடி, சொல்லு!"

"உங்க காங்கிரஸ் ஆட்சியிலே படி அரிசி என்ன விலை? காய்கறிக்குக்கூட கிராக்கி வந்த காலம் எப்போதாவது உண்டா? அரையணா செலவிலே ஏழை பாழைகளுக்கு உற்சாகம் தருகிற வெற்றிலைப் பாக்குக்குக்கூடப் பஞ்சம் வந்துவிட்டதே, பாவிகள் ஆட்சியில்! நோயாளிகளுக்குப் பழம் கிடைக்கவில்லை. முட்டை கிடைக்கவில்லை! கிடைத்தாலும் ஒன்றுக்கு மூன்று விலை! எல்லாவற்றுக்கும் வரியைப் போட்டுத் தீட்டிவிட்டீர்கள்!"

"யாருக்கடி வரி போட்டிருக்கிறோம். வியாபாரிகளுக்கு வரி போட்டால் உனக்கேனடி கஷ்டம் கவலை யெல்லாம்?"

"வியாபாரிக்கு வரி போட்டால், மொத்த வியாபாரி சில்லறை வியாபாரி தலையிலும், சில்லறை வியாபாரி வாங்குகிறவர்கள் தலையிலுந்தானே அந்த வரியைக் கட்டி விடுகிறான். இது கூடத் தெரியாமல் ஆளவந்து விட்டீர்களே; ஆள!"

"வரி போடாமல் ஆள முடியுமா? எந்த நாட்டிலாவது எந்த சர்க்காராவது வரி போடாமல் ஆளுகிறதா?"

"வரி போட வேண்டாமென்று சொல்லவில்லை. கவர்னருக்கு வருஷந்தோறும் கொட்டிக் கொடுக்கிற ஒன்பது லட்சத்தையும். ஊட்டியில் செய்கிற ஊதாரிச் செலவையும் குறைத்துக் கொண்டால் எவ்வளவோ வரிகளைக் குறைக்கலாமே?"

"அடியே, அடியே! இதெல்லாம் எப்போதடி பேசக் கற்றுக் கொண்டாய்...? ம்...யார் கற்றுக் கொடுத்தது?"

"யாரும் கற்றுக் கொடுக்கலே! எனக்கே புரியுது! போதும் போதாதற்கு......பட்டணத்திலே எலக்ஷன் நடக்கிறதும் போதும்; அரசியலே இப்ப நம்ப வீட்டு வாசலுக்கே வந்துட்டுதே! மந்திரிகளை நம்ப பார்க்க முடியுமான்னு இருந்தேன். மந்திரிகளே நம்ப விடு தேடி வந்தாங்களே! 'நம்ப வீட்டுக் கல்யாணங் காட்சிக்குக் கூப்பிட்டால் இந்த மந்திரிகள் வருவாங்களா? தேர்தல்னா எல்லாரும் வரிசை வரிசையா வர்ராங்களே'ன்னு பக்கத்துத் தெருவிலே குடிசையிலேயிருக்கிற பெண்கள் எல்லாம் பேசிக் கொள்கிறார்கள்!"

"பேசுவாங்க — பேசுவாங்க! அவுங்க பேசினாலும் பேசாவிட்டாலும் நீ பேசுவே! கொஞ்ச நாளாக நீ ஒரு மாதிரிதான் இருக்கிறே!"

"இருந்தாலும் போங்க—உங்க புத்தி வர வர மோசமாகப் போய் விட்டது. "தமிழ் வாழ்க!" அப்படின்னு சுவரொட்டி ஒட்டியிருந்தாக்கூட அதைப் போய்க் கிழித்து எறிகிறீர்களாமே?"

"ஆமாம்! ஆபாசத் தடைச் சட்டத்தை மீறி கண்டபடி சுவர்களில் ஒட்டலாமா?"

"தமிழ் வாழ்க—என்பது ஆபாசமா?"

"அது ஆபாசமில்லை! அப்படி சுவற்றில் எழுதுவது ஆபாசம்! ஒட்டுவது ஆபாசம்!"

"ஆபாசம் என்பதற்கே உங்களுக்கு அர்த்தம் புரியவில்லை! "தமிழ்" என்ற சொல்லையே நீங்கள் ஆபாசமாகக் கருதுவதால் தான் இந்த நாட்டுக்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்கவே நீங்கள் தயங்குகிறீர்கள் என்கிறேன், நான்."

"ஆமாம் — அப்படித்தான் நினைத்துக் கொள்ளேன். இந்த பாரு; இப்ப என்னிடம் பேசிக் கோபத்தைக் கிளப்பாதே! லட்சம் லட்சமாகப் பணம் பாழாகி, முடிவு என்னமோ மூலையில் உட்கார வேண்டிய அளவுக்கு ஆகியிருக்கிறது..."

"உங்க வீட்டுப் பணமா செலவழிந்தது? ஊருக்கு ஊர் ஆலை முதலாளி, பஸ் முதலாளி, நிலப் பிரபு, ஜமீன்தார்—இப்படி எத்தனையோ அப்பாவிகள் கிடைக்கிறார்கள். அவர்கள் பணத்தை வாங்கித் தேர்தல் வாண வேடிக்கை நடத்துறிங்க!"

"இவ்வளவு பணம் செலவழிச்சு இந்தத் தடவை தோற்றவனும், அல்லது தோற்றவனைப் பார்த்தவனும் அடுத்த தேர்தலில் நிற்பதற்கே துணிய மாட்டானே யென்பதை நினைத்தால் எதிர்காலம் ஒரே இருட்டாயிருக்கிறதடி!"

"இருக்கட்டும்! இருக்கட்டும்! இருட்டைப் போக்க "உதய சூரியன்" வருவான்!"

"என்னது? உதய சூரியனா? ஓகோகோ! நேற்று அந்தத் தி. மு. க. கூட்டம் இந்தத் தெருவிலே நடந்ததா? அதைக் கேட்டு விட்டுத்தான் தலைகீழாய் நிற்கிறாயா? புரியுது! புரியுது!!"

"நான் மட்டுமா? தெருவே தலைகீழ மாறிப்போச்சு! எல்லா ஓட்டுமே உதயசூரியனுக்குத்தானாம்!"

"நீயே ஓட்டு சேகரிக்கிறாயா? ...அடியே....! இப்படியெல்லாம் பேசினால் என்னை மறந்துட வேண்டியதுதான்! உன் கணவனுக்கு அவமானம் ஏற்பட வேண்டுமென்று நினைத்தால் நீ உதயசூரியனுக்கு ஓட்டுப் போடு!"

"கணவனுக்கு அவமானம் வரக்கூடாது என்பது சரிதான்! அதே நேரம் என் மகனுக்கு அவமானம் வரலாமா?"

"என்னது? என்னது?"

"ஆமாம்—நம்ப பிள்ளையாண்டான், 'உதயசூரியனு'க்குத் தானே வேலை செய்கிறான்."

"அய்யய்யோ! குடும்பமே என்னை எதிர்க்கிறதா? நேற்று நடத்திய ஒரு கூட்டத்திலே அந்தப் பயல்கள் இதுபோல பல குடும்பங்களைக் கலைத்திருப்பார்களே—சரி; சரி! இப்போதே போய் இன்று காங்கிரஸ் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்!"

"காங்கிரசுக்குப் பேச யார் வருகிறார்கள்?"

"பேசுவதா? பேச்சு எதற்காக? அந்தத் தி. மு. க. பசங்களை மனமாறத் திட்டித் தீர்த்தால் போதும்! இரண்டு பேச்சாளர்! நாலு குண்டர்கள்! இன்றைக்குப் பார்த்து விடுகிறேன் ஒருகை!"

—என்றவாறு, தேசியம் பிள்ளை பரபரப்பாக எழுந்து வெளியே புறப்பட்டார். அவரது மனைவி, கணவனின் ஆத்திரத்தைப் பார்த்துக் கேலியாகச் சிரித்துக் கொண்டாள்.

தேசியம் பிள்ளை வாயிற்புறம் வந்தார். டிரைவரைக் கூப்பிட்டு அவசரமாகக் காரை எடுக்கச் சொன்னார். கார் வந்து நின்றது. அவரது மகள் தெருவிலே கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

"கமலா! கமலா!! இன்று மாலை பொதுக்கூட்டத்தில் நீ பாடவேண்டும்!" என்று உரக்கச் சொன்னார்!

"ஓ, பாடுகிறேன்—எந்தக் கூட்டத்திலப்பா?" என்று குனிந்திருந்த கமலா நிமிர்ந்தாள். வாசலில் அவள் போட்ட கோலம் தேசியம் பிள்ளையின் கண்ணில் பட்டது. வழக்கமாகக் கமலா போடும் கோலமல்ல அது! புதியகோலம்!

உதய சூரியன் கோலம்!

தேசியம் பிள்ளை திகைத்து நின்று விட்டார்.

"அம்மாவிடம் சொல்லிவிடு, அப்பா ஊட்டிக்குப் போகிறார் என்று!"

இதைக் கூறிவிட்டு அவர் காரில் ஏறி உட்கார்ந்தார். கார் புறப்பட்டது.

கோலத்தைப் பார்த்துக் கொண்டே கமலா நின்றாள். அம்மா வெளியே வந்தாள். மகள், தந்தை சொன்ன சேதியைச் சொன்னாள்.

"என்ன செய்வது மகளே! காங்கிரஸ் கட்சி மலையேறும் காலம் வந்து விட்டது!"

—என்று தேசியம் பிள்ளையின் மனைவி, பதில் கூறிவிட்டு கார் போன திக்கு நோக்கி நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தாள்.

(முற்றும்)

★★
★

தி. மு. கழக முத்தமிழ் மாநாடு

ஏப்ரல் திங்கள் 18, 19 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்
காரைக்கால் தோமாஸ் அருள் திடலில் நடைபெறும்.

தலைவர்:
மா. கி. தசரதன் எம். ஏ.
திறப்பாளர்:
க. இராசாராம் பி. ஏ.

அறிஞர் அண்ணா
நாவலர் நெடுஞ்செழியன்
கழக முன்னணி வீரர்கள்—நடிகர்கள்
மற்றும் பலர் கலந்து கொள்வர்.

கலைஞர் கருணாநிதி பங்கேற்று நடிக்கும்
"உதயசூரியன்" நாடகம்
நடைபெறும்.

["கவியரங்கம்" சிறப்பு நிகழ்ச்சியில் கவிஞர்கள் கண்ணதாசன், வாணிதாசன், முடியரசன், கருணானந்தம், புதுவை சிவம், ரவி, துறையூர் ந. அலி பங்கேற்கின்றனர்.]

—வரவேற்புக் குழு

பிச்சைக்காரர்கள்!

சி. ஜம்பு

திராவிடர்களிடையே விடுதலை உணர்வு கொந்தளிக்கின்ற அளவில் திராவிடம் தன்னாட்சி பெறவேண்டும் எனும் பெருங் குறிக்கோளை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பட்டி தொட்டி, நாடு நகரங்களிலெல்லாம் பரப்பி வருகின்றனர். இந்தியா ஒரு நாடல்ல; அடிமைத் தளையில் ஏதேச்சாதிகாரத்தினால் பலவந்தமாகப் பிணைக்கப்பட்டிருக்கும் ஒரு துணைக்கண்டம் என்று கூறுகின்ற நேரத்தில், ஏக இந்தியா என்று பிதற்றித் திரிபவர்களைக் கோபமும் ஆவேசமும் தழுவிக் கொள்ளுகின்றன. ஆட்சி பீடத்தில் அதிகார ஆணவத்தோடு வீற்றிருக்கின்ற கொலு பொம்மையாம் காமராஜர் துடிதுடிப்படைந்து கோபத்தால் கொந்தளிக்கத் துவங்கிவிடுகின்றார். தன் நிலை மறந்து. அரசியலுக்கு வேண்டிய நாவடக்கத்தை நழுவவிட்டு, திராவிட விடுதலை கோரி உயிருக்கு, உடைமைக்கு அஞ்சாமல் பணிபுரியும் தீரர்களைப் பிச்சைக்காரர்கள் என வருணிக்கின்றார். ஆணவக்காரர்களும், ஆர்ப்பாட்டக்காரர்களும், விசுவாசமிக்க ஏகாதிபத்தியக் காவலாளிகளும் விடுதலை வீரர்களை இப்படித்தான் பிச்சைக்காரர்கள் என்று பெயரிட்டு அழைத்திருக்கின்றனர். வரலாறு நமக்கு இதை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

16-ம் நூற்றாண்டின் துவக்கப் பருவம்! ஐரோப்பாக் கண்டத்தில் இந்நாளில் காணுகின்ற அளவில் தேசியத் தன்மை பொருந்திய நாடுகள் உருவாகவில்லை. இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின், போர்ச்சுக்கல் இவை நான்குதான் தேசிய நாடுகள் என்று வரையறுத்துக் கூறுகின்ற நிலையில் அங்கு அமைந்திருந்தன. மாஸ்கோ என்னும் பெயரிலே ரஷ்யா விளங்கியது. கருவிலே தேசிய உணர்வு கொண்டு பல பகுதிகள் இருந்தன. சிறுசிறு நகர நாடுகள் எங்கும் பரவிக் கிடந்தன.

இப்படிப்பட்ட நிலையில் தெய்வீக ரோம் சாம்ராஜ்யம் என்ற பெயரில் ஸ்பெயின் ஆதிக்கம் வகிக்க ஆஸ்திரியா, அங்கேரி பகுதிகள், இன்றைய நாளில் பெல்ஜியம், ஆலந்து என்றழைக்கப்படும் நெதர்லாந்து, இத்தாலி போன்ற நிலப்பரப்பை ஐந்தாம் சார்லஸ் ஆண்டுவந்தான். அவனுடைய காலத்திலேயே, அவனது தம்பி பெர்டினண்டுக்காக தெய்வீக ரோம் சாம்ராஜ்யத்தின் மாமன்னன் என்ற பட்டப் பெயரோடு ஆஸ்திரியா, அங்கேரி முதலான பகுதிகளை ஒதுக்கிவிட்டு, மகன் இரண்டாம் பிலிப்புக்கு ஸ்பெயின், இத்தாலி பகுதிகள், நெதர்லாந்து ஆகியவைகளை உரிமையாக்கி அவனை ஆட்சி பீடத்திலமர்த்தினான்.

இரண்டாம் பிலிப் (1556—1598) தன்னுடைய ஆட்சிப் பரப்பு பல்வேறு நிலைமைகளில் பிளவுபட்டுச் சிதறுண்டு கிடந்தாலும், ஒற்றுமையை உருவாக்கி, கட்டுக்கோப்பான ஒரு சாம்ராஜ்யத்தை நிறுவுவதற்குப் பெரிதும் விரும்பினான். அதற்கு ஸ்பெயினைத் தலைமை நிலையில் வைத்து, ஆதிக்கபுரியாக மாற்றவும் முனைந்தான். இரண்டாம் பிலிப்பைப் பொறுத்த மட்டில் கத்தோலிக்க மதப்பற்று நாடெங்கும் பரவ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவனாக விளங்கினான்.

ஸ்பெயினுக்கும் நெதர்லாந்துக்கும் பூகோள ரீதியாக, கலாச்சார வழியாக, பொருளாதார சிரத்தைகள் மூலமாக இப்படி எந்நிலையிலும் ஒற்றுமை இல்லை. ஐந்தாம் சார்லஸ் மன்னனே நெதர்லாந்தில் பிறந்தவராக, நெதர்லாந்தை முக்கியமாகக் கருதுபவராக விளங்கினார். எனவே, அவர் ஆட்சிக் காலத்தில் ஸ்பெயினின் தொடர்பு அறுபட வேண்டும் எனும் எண்ணம் எழவில்லை. ஆனால் இரண்டாம் பிலிப் ஆட்சி பீடத்திற்கு வந்ததற்குப் பின்னர் நிலைமை மிகமிக வேகமாக மாறிற்று. நெதர்லாந்து ஸ்பெயினிலிருந்து விடுபட்டு, தனியாட்சி நிறுவ விரும்பியது. இரண்டாம் பிலிப்பின் நடவடிக்கைகள் விடுதலை வேட்கையை மேலும் வளர்த்தன.

இரண்டாம் பிலிப் வரிகளை மிகக் கொடுமையான அளவிற்கு உயர்த்தினான். வரிகளின் உயர்வால் நெதர்லாந்து நீங்கிய ஏனைய பகுதிகள் பலன் பெற்றுக் கொழுத்தன. ஸ்பெயினின் வாணிகம் சீர்பெற்று வளர வேண்டி, நெதர்லாந்து மீது அநியாயமாகத் தடைகள் பலவிதித்து, அதனுடைய வாணிப வளர்ச்சியைத் தேக்கி ஒடுக்கினான்.

இரண்டாம் பிலிப் நெதர்லாந்துக்குச் செல்லுவதே இல்லை. ரீஜண்டாக இருந்து கொண்டு ஆளுவதற்கும், பல்வேறு ஆட்சிப் பொறுப்புகளுக்கும் ஸ்பானிஷ்க்காரர்களையே நெதர்லாந்துக்குத் தொடர்ந்து அனுப்பி வந்தான். நெதர்லாந்து மக்களுக்கு சொந்த நாட்டில் ஆட்சிப் பொறுப்பு மாற்றார்கள் கையில் இருப்பது மேலும் வெறுப்பை தணியாத வகையில் வளர்த்தது.

பிலிப்பின் தந்தையான ஐந்தாம் சார்லஸ் நெதர்லாந்தில் பிறந்தவராக, அங்கேயே வாழ்ந்தவராக இருந்ததோடு நெதர்லாந்து வளர தனிப்பட்ட அக்கறை செலுத்தி வந்தார். ஆனால், பிலிப்போ ஸ்பெயினில் பிறந்து வளர்ந்தவன். நெதர்லாந்துக்கு மாறுபட்ட அன்னிய மொழியைப் பேசுபவன். அவன் ஒரு அந்நிய நாட்டுக்காரனாக நெதர்லாந்து மக்களால் கருதப்பட்டு வந்தான். அத்தோடு, நெதர்லாந்துக்குப் பிலிப் வருவதும் இல்லை.

எனவே சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இன்றைய தினம் திராவிடம் இருக்கும் நிலையில் அந்நாளில் நெதர்லாந்து இருந்து வந்தது.

தமிழ் புத்தாண்டன்று வருகிறது!

'திராவிட நாடு' இதழில் வெளிவந்த

சுவைமிக்க புனைகதை

தணலில் தங்கம்

ஒவ்வொரு குடும்பத்திலும்

இருக்க வேண்டிய

மாண்பு விளக்கம்!

மா.கி. தசரதன், எம்.ஏ., அளித்திடும் எழிலோவியம்!

விவரங்களுக்கு

வெண்ணிலா வெளியீடு

சி. காஞ்சிபுரம்

திராவிடம் சேர்ந்த இந்திய மாநிலங்கள் அனைத்திலும் வரிகள் மேலும் மேலும் பெருஞ்சுமையாய் விதிக்கப்படுகின்றன. என்றாலும், வசூலாகும் வரிகளால் கிடைக்கும் வருமானம் யாவும் வட மாநிலங்கள் மட்டும் வளங்கொழித்துச் சிறந்திட செலவழிக்கப்படுகின்றன. வட நாட்டுப் பெரும் முதலாளிகளின் வாணிகம் வளமடைய, தொழில் வளர திராவிடம் சந்தையாக்கப்படுகின்றது.

திராவிடத்திற்குக் கவர்னராக நியமிக்கப்படுபவர்கள் எல்லாம் வடவர்களே! தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் முதலில் பவநகர் மன்னர், பின்னர் ஸ்ரீபிரகாசா, தற்பொழுது விஷ்ணுராம் மேதி! இப்படி, தொடர்ந்து வடபுலத்தார் அரியணைத் தலைவர்களாய் அனுப்பப்படுகின்றனர்.

திராவிட மொழிக் குடும்பம் குலைய இந்தி மொழி திணிக்கப்படுகின்றது. வழிவழி வந்த பண்டைத் திராவிடக் கலாச்சாரம், இலக்கியம் புறக்கணிக்கப்பட்டு, வடநாட்டுக் கலை, இலக்கியம் வளரும் நிலை உருவாக வழி செய்யப்படுகிறது.

இந்தியாவின் முக்கியத் தலைவர்களாய்க் கருதப்படுகின்றவர்களெல்லாம் வடவர்களே! வெளிநாட்டுத் தூதுவர்கள் பெரும்பாலும் வடவர்களே! வளரும் வாய்ப்புகளில் எல்லாம் வடவர்களே! திராவிடத்துப் பெருந்தலைவர்களோ சீரழிக்கப்பட்டு, நாதியற்றவர்களாய் — அவமானச் சின்னங்களாய் ஒதுக்கப்படுகின்றனர்.

ஆக, 16-ம் நூற்றாண்டு நெதர்லாந்துக்கும் 20-ம் நூற்றாண்டுத் திராவிடத்துக்கும் இந்நிலைமைகளில் வேறுபாடு இல்லை. பழைய பிலிப்புக்கும், இன்றைய நேருவுக்கும் நிறைய ஒற்றுமை உண்டு. திராவிடம் விடுதலை கோரி நிற்கும் நிலைமையைப் போலவே, அன்று நெதர்லாந்தும் தன்னாட்சி உரிமைக்காக விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடத் துவங்கியது.

நெதர்லாந்து ஒருமுகமாக விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட நேரத்தில் நெதர்லாந்தை இரண்டு பெரும் பகுதிகளாகப் பிரிப்பதில் பிலிப் வெற்றி கண்டான். நெதர்லாந்தின் வட பகுதி — இன்றைய தினம் ஆலந்து நாடு — டச்சு மொழி பேசும் பகுதியாக, கால்வினிச பிராட்டஸ்டண்டில் பற்றுடையதாக, வாணிகச் சிறப்புப் பெற்றதாக இருந்தது. தென் பகுதி அதாவது இன்றைய பெல்ஜியம் கத்தோலிக்கப்பற்றுக் கொண்டதாய், தொழிற் சிறப்பு வாய்ந்ததாய் விளங்கியது.

தென் பகுதி ஸ்பெயினோடு இணைந்திருப்பதைவிட, வட பகுதியோடு கூடியிருப்பதைப் பெரும் ஆபத்தாக எண்ணி அஞ்சியது. விடுதலைப் போராட்டத்தில் மேலும் ஈடுபடத் துவங்கியது. எனவே, இந்நிலையில், 1579-ல் வட பகுதி மாநிலங்கள் ஏழும் கூடி, "ஊட்ரெச்ட் யூனியன்" என்ற பெயரில் இணைந்து விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியது. தென் பகுதி "ஸ்பானிஷ் நெதர்லாந்து" என்றழைக்கப்பட்டது.

வில்லியம் சைலண்ட் என்பவர் நெதர்லாந்தின் உரிமைக் குரலை ஒலிப்பவராக, விடுதலை இயக்கப் படைத் தளபதியாக ஞாயிறு

[தொடர்ச்சி பக்கம்—8]

ஏப்ரல்
3உ முதல்
சென்னை மற்றும்
தென்னாடெங்கும்
மாடர்ன் தியேட்டர்ஸ்
வண்ணக்கிளி
சங்கீதம்..K.V.மஹாதேவன் டைரக்ஷன்...T.R.ரகுநாத் வசனம்..ரா.வே.
BALU BROS

வாழ்வினை அறுப்போரை விழுங்கிட வானகமே; வையகமே; வாய்திற!

"ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட, ராஜகோலாகல, டில்லி சாம்ராஜ்யத்தின் முடிசூடா மன்னர், ஆசியாவின் ஜோதி, அகில உலகத்தை சமாதானக் குளிகையால் கலக்கிடும் பேதி, அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படையுடன் ஆண்ட இனமாம் தமிழினத்தை அடிமை கொண்ட வீராதி வீரர், அண்மையில் சென்னை வந்தபோது மொய்தீன் பிச்சை எனும் இளைஞரின் இதயத்தை மென்று தின்று ஏப்பம் விட்ட சூராதி சூரர், ஸ்ரீ சோஷலிஸ ஸ்ரீ பண்டித ஜவஹர்லால் நெஹ்ரு அவர்கள் வரப்போகிறார்! பராக்! பராக்!"

—என்று காமராஜர் கட்டியம் கூறப்போகிறார், சென்னையில்!

ஆம்: நேரு பண்டிதர் சென்னைக்கு விரைவில் வரப்போகிறாராம்!

விண்ணைக் கிழித்து ஓடிவந்த நேருவின் ஆகாய விமானம் மண்ணைத் தொட்டதும் அவருக்கு ஆள் உயர மலர்மாலைகள் போடப்படும்!

கன்னம் பூரிக்க, கனியுதடு புன்னகையை வெளிக்காட்ட, சின்னவிழி பூத்துச் சிரிக்கின்ற பெண்கள் கைலாகு கொடுத்து அவரை வரவேற்பார்கள்!

பேசும் பொற்சித்திரங்களான அந்தப் பெண்களின் நடுவே இந்தப் 'பாரதப் பிரதமர்' கையில் குறுந்தடி ஏந்தி, குறும்புப் பார்வையுடன் போட்டோ பிடித்துக் கொள்வார்.

போட்டோ பிடித்து முடிந்ததும், தூர விலகிநின்ற மந்திரிக் கூட்டம் ஓடிவரும், பிரதமருடன் சேர்ந்து கொள்ளுவதற்கு!

திறந்த காரிலே, சிறந்து விளங்கும் சென்னை நகரத்தின் அலங்காரத்தை ரசித்தவண்ணம் நேரு மாமா பவனி வருவார்!

ராஜபவனம், ராஜாஜி வீடு, அடையார், மாம்பலம், மயிலாப்பூர், நேரமிருந்தால் சினிமா ஸ்டுடியோ, நாட்டியக் கச்சேரி, நேரமிருந்தாலும் இல்லாவிட்டாலும் 'பாரத நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கும் நாச சக்திகளை'த் திட்டுவதற்கு ஒரு பொதுக் கூட்டம்.

—இப்படித்தான் நேரு பண்டிதரின் சென்னை அலுவல்கள் இருக்குமென்று நினைக்கின்ற நமக்கு, இந்த வேலைகளை விட மிகமிக முக்கியமான ஒரு அலுவலை முடிக்கத்தான் அந்த முடிசூடா மன்னர் டில்லியிலிருந்து ஓடோடி வருகிறாராம் என்ற செய்தி வியப்பூட்டும்!

என்ன அந்த அலுவல்?

பல்லாயிரக் கணக்கான ரூபாயில் அமைக்கப் போகும் காந்தி சிலையைத் திறக்கின்ற அதிமுக்ய அலுவல்!

அதுவும் அழகு கொழிக்கும் மெரினாக் கடற்கரை யோரத்தில்! கடற்கரையில் நிற்கும் காந்தி சிலையைக் காட்சிக்குத் திறந்து விட நேரு பண்டிதர் டில்லியிலிருந்து வருகிறாராம்!

வேடிக்கையும், வேதனையும் நிறைந்த இந்த செய்தியின் பின்னேயுள்ள சில பெரிய மனிதர்களின் 'அர்த்தமற்ற அரிப்பை' நாம் புரிந்து கொள்ளாமல் இல்லை!

மாநிலத்தின் பெருமையை உயர்த்துகின்ற மெரினாக் கடற்கரையின் அழகைக் குறைக்க வேண்டும் என்று நாம் கூற மாட்டோம்!

வெள்ளையுள்ளம் ஒன்றையே ஆயுதமாகக் கொண்டு வெள்ளையரை எதிர்த்துப் போராடிய காந்தியின் சிலையை நேரு திறப்பது பற்றி நாம் எதிர்க்கவில்லை!

ஆனால் காந்தியடிகளின் சிலையைக் கடற்கரையில் நிர்மாணிக்கும் சென்னை நகரசபையின் செயல் அர்த்தமற்றது; ஆடம்பரமானது என்றுதான் கண்டிக்கிறோம்!

துண்டு விழுகிற நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்துவிட்டு, பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவிட்டு காந்தி சிலையை திறக்க வேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது என்று கேட்க விரும்புகிறோம்!

'பணமில்லை! பணமில்லை'— என்று நாள்தோறும் பல்லவி!

ஆனால் படாடோபத்திற்கு மாத்திரம் மூச்சுப் பேச்சின்றி பணப் பெட்டி திறந்து விடப்படுகிறது!

அப்படியென்ன மெரினாவில் சிலை இல்லையா?—

அதுதான் நால்ரை லட்சம் ரூபாயைத் தூக்கி விழுங்கிவிட்டு "உழைப்பின் வெற்றி" எனும் சிலை கடற்கரையில் நிற்கிறதே!

அந்த அழகுச்சிலை பல லட்ச ரூபாயை மட்டுமா விழுங்கியது? முன்னாள் போலீஸ் சர்ஜனின் வீட்டுப் பெண்களின், குழந்தைகளின் பிணங்களையுமல்லவா விழுங்கி விட்டு உட்கார்ந்திருக்கிறது!

—இது போதாதா?

காந்தியடிகளின் சிலைதான் என்ன நகரில் இல்லையா?

அதுதான் பல ஆயிரம் ரூபாய்களை 'ஜீரணித்துவிட்டு' ராஜபவனில் லட்ச லட்சமாய் விழுங்கும் கவர்னரின் அருகாமையில் இருக்கிறதே, காந்தி ஞாபகார்த்த மண்டபம்! காந்தி சிலையையும், நகரின் அழகையும் ஏற்படுத்திக் காப்பாற்ற முனைந்து நிற்கிற காங்கிரஸ் கனவான்களே!

நகரில் அழகைத் தோற்றுவிப்பது கிடக்கட்டும்! நகரின் அழகைக் கெடுப்பவைகளைக் கொஞ்சம் கண் திறந்து பாருங்கள்!

வலுவில் செடியை நிறுத்தி, வாரந்தோறும் தண்ணீர் வார்த்து, வண்ண மலர்களை உண்டாக்கி சென்னையை அழகு நகராக்க முனைபவர்களே!

எலும்பே விறகாய் இறைச்சியே கறியாய் இதயக் கனலில் பொறித்துச் சாப்பிட்டு, தெருவோரத்தில் பட்டினியால் கசங்கிக் கிடக்கும் மனித மலர்களைக் கொஞ்சம் பாருங்கள்!

பாக்கு வர்ணத்திலே காந்தி சிலையமைத்து பாரதப் புத்திரரைக் கூப்பிட்டு திறந்து வைக்க சொல்லுபவரே!

மூக்குமுனை தரையில் முட்டக் குனிந்து புகவேண்டிய குடிசைகளைக் கொஞ்சம் பாருங்கள்!

சாக்குப்பையை சல்லாப சப்ரகூட மஞ்சமாக்கி, தேக்கு மரத்தில் கடைந்தெடுத்த சின்ன தேர் போன்ற பிள்ளையைப் பெற்றெடுக்க இன்பவழி தேடுகின்ற இந்நாட்டு மக்களின் இழிநிலையைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்!

நாக்கு மேல்வாயில் ஒட்டிக் கொள்ள, மூக்கைப் பிடித்துக் கொண்டு கால்களை நிதானமாக எடுத்து வைக்க வேண்டிய நிலை படைத்த சேரிகளைக் கொஞ்சம் பாருங்கள்!

பீளை படிந்த பிணத்தின் கண்களும், பசியால் பள்ளமாகிவிட்ட வயிறும் கொண்டு உலவுகின்ற சேரிவாழ் மக்களை நினைத்து பாருங்கள்!

சேரிவாழ் மக்களின்மேல் அளவிலா அன்பு கொண்ட காந்தியின் சிலையை நிர்மாணிக்கும் பெரியவர்களே! அந்தப் பணத்தைக் கொண்டு சேரிவாழ் மக்களுக்கு சின்னஞ்சிறு வீடுகள் அமைத்துக் கொடுக்கலாமே?

பண்டிதர் வருவதாலும் போவதாலும் ஏற்படும் செலவையும், அவர் வருவதால் இங்கு ஏற்படுகின்ற போலீஸ் செலவையும் மீதிப்படுத்தி சேரிவாழ் மக்களுக்கும், நடைபாதையில் வாழும் மக்களுக்கும் நிரந்தரக் குடியிருப்புக்கு வழி செய்யலாமே!

—மேலே சொல்லிய நல்ல கருத்தைப் பலமுறை எடுத்துச் சொல்லியும் காந்தி சிலையைத் திறந்து வைக்கும் திட்டம் அசையக் காணோம்!

சில பல கதர்ச் சட்டைகளின் படாடோபப் ஆசைக்கு பலியாகிவிட்ட 'காந்தீயம்' எனும் தத்துவம் இனி பிழைக்கப்போவதில்லை என்பதைத்தான் இந்த 'காந்தி சிலை' திறப்பு நிகழ்ச்சி நிரூபிக்கப் போகிறது!

எதனுடைய ஆதாரத்தைக் கொண்டு வளர்ந்து, பதவி எனும் வனிதாமணியின் அணைப்புக்குச் சொந்தக்காரர்கள் ஆனார்களோ, அந்த எளிமை நிறைந்த

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

துள்ளிவரும் தமிழ் நடையழகை
அள்ளிவரும் புதிய அமைப்பு

முத்தாரம்

- கறுப்பு மலரை வெள்ளை மலர் காதலித்தது; நிறபேதம் எனும் காட்டெருமையோ அவைகளை மிதித்துத் துவைக்க ஆரம்பித்துவிட்டது! வாடிப்போன அந்த மலர்களின் வரலாற்றைச் சொல்லுகிறது, பி. சி. கணேசன் எழுதிய

கர்த்தரின் கருணை!

- உழைக்கவுமில்லை; உறக்கம் கெடவுமில்லை; இருந்தாலும் சோர்வுணர்ச்சி உண்டாகிறதா உங்களுக்கு? அதை அகற்றும் மார்க்கத்தை விளக்கிறது...

அயர்வை அழிப்பீர்!

- கணவன் காயம்பட்டுக் கிடக்கிறான்; கயவன் கைப்பற்றி இழுக்கிறான்; களத்திற்கு வாளெனக் கூவியழைக்கிறது பிறந்த பொன்னகரம்! என்ன செய்வாள் அந்த வீராங்கனை? மரண முகட்டிலே மானத்தைக் காப்பாற்றிய பெண்ணரசியின் நடந்த கதை...

தியாகத் தீ!

- கலையுலகின் தனிப் பெரும் கதாநாயகன் — திக்கெட்டும் புகழ் சேர்த்த திரையுலகின் தீபச் சுடர் — அவனைப் பற்றி மாறன் எம். ஏ. எழுதும்...

மார்லன் பிராண்டோ

★

இத்தனையும் இதழ் 25-ல்!

ஏப்ரல் முதல் வாரம் கிடைக்கும்!

‘முரசொலி’

12 பக்கங்கள்

புதிய தொடர்கதையான “ரோமாபுரிப் பாண்டியன்” ஆரம்பமாகும் 17—4—59 இதழ் முதல், “முரசொலி” முன்போல் வாரம்தோறும் 12 பக்கங்களுடன் வெளிவரும். கூடுதல் பிரதிகள் தேவைப்படும் விற்பனையாளர்கள் 6—4—59-க்குள் தேவையான முன்பணத்துடன் தெரிவித்து விட வேண்டுகிறோம்.

—நிர்வாகி

“மக்களாட்சி”

ஆசிரியர் : இளமுருகு பொற்செல்வி

1—4—59 இதழ் முதல் புதிய பகுதிகள் பலவற்றுடன் வெளிவருகிறது

விலை காசு 8

சிறப்பு ஆசிரியர் : கரூர் மு. குழந்தைவேல்

(விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை)

“மக்களாட்சி” குளித்தலை—திருச்சி.

வாழ்வினை...

[முன் பக்கத் தொடர்ச்சி]

காந்தீயத்தை ஆடம்பரத்தீயிலே வீசி எறிந்து விட்டார்கள், இந்த நிகழ்ச்சியின் மூலம்!

சேரிவாழ் மக்களின் கோரிக்கைக் குரல் இவர்களின் காதிலே இனி ஏருது; நடைபாதையிலே வாழுகின்ற மக்களுக்கு வாழ வழி செய்யும் அன்பு விதை இவர்கள் இதயத்திலே முளைக்காது; இதயத்தைக் கல்லாக்கிக் கொண்ட இவர்களிடமிருந்து கருணை எனும் நார் உரிக்க முடியாது!

‘உடல் அலுக்க உழைத்தும் குடல் கழுவ வழியின்றியிருக்கும் போது கொண்டைக்குக் குண்டு மல்லிகைப்பூ கேட்கும் இந்த மாபாதகர்களை—

‘குடிசையிலே, குளத்தோரத்திலே, நடை பாதையிலே, நாட்டு மக்கள் காலச் சகடத்தை உருட்டிக் கொண்டிருக்க, நீலக் கடல் கடந்து வருவோரின் கண்ணைக் குளிரவைக்க காந்தி சிலையினை அமைக்கும் பொருட்டு பணத்தை வாரி வீசும் இந்தப் படுமோசக்காரர்களை—

‘வானகமே, வையகமே நீ வாய் திறந்து விழுங்காயோ; வீழ்த்தாயோ?’ என்று முடியாதவர்களின் பாணியில் இந்நாட்டு மக்கள் சபித்து விட்டுச் சும்மா இருக்கப் போகிறுர்களா? —அல்லது ஓட்டு எனும் சக்தி மிகுந்த ஆயுதத்தைப் பயன்படுத்தி பொது மக்களின் வரிப் பணத்தை வீணடிக்கும் இவர்களைத் தோல்வி எனும் மீளாத இருட் குகைக்கு அனுப்பி வைக்கப் போகிறுர்களா? ∴

பிச்சைக்காரர்கள்...

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

போல் திகழ்ந்தார். வில்லியத்தை உயிரோடோ அன்றிப் பிணமாகவோ கொண்டு வருபவர்களுக்குத் தக்கப் பரிசுகள் வழங்கப்படும் என பிலிப் அறிவித்தான். இந்த அறிவிப்பு வெளியான உடனேயே, 1581ல் ஹேக் நகரத்தில் விடுதலை வீரர்கள் கூடி, ஆலந்து நாடு எல்லாவித ஆதிபத்திய உரிமைகளையும் கொண்ட ஒரு சுதந்திர நாடு எனும் பிரகடனத்தை வெளியிட்டனர். அப்பிரகடனத்தை “டச்சு விடுதலைப் பிரகடனம்” என்றழைக்கலாம்.

ஒரு மன்னன் குடி மக்களுக்கு உற்றப் பாதுகாவலனுய்த் திகழ்வதை விட்டுவிட்டு, குடிமக்களைக் கொடுமையில் ஆழ்த்துவோனுக, அடிமைகளாய்ப் பாவிப்பவனுக மாறிவிட்டால் அவன் அரசுரிமையை இயல்பாகவே இழந்தவனுவான் என்று அப்பிரகடனத்தில் கூறப்பட்டது. இங்கிலாந்து. அமெரிக்கா. பிரான்சு ஆகிய நாடுகளில் பின்னர் ஏற்பட்ட புரட்சிப் பிரகடனங்களுக்கு முன் மாதிரியாய் இது ஒளி காட்டி விளங்குகின்றது.

விடுதலைப் போராட்ட காலத்தில் பல்வேறு கொடுமைகளை ஆலந்து நாட்டு மக்கள் அனுபவிக்க நேர்ந்தது. பிலிப் அனுப்பிய ஏகாதிபத்திய சேனைகளை விடுதலை வீரர்கள் எதிர்த்துப் போராடினர், விடுதலை வீரர் வில்லியம் துரோகிகளால் கொல்லப்பட்டார். நாட்டு மக்களோ, பிலிப்பின் பட்டாள வீரர்களால் வேதனைக்குள்ளானுர்கள். பிலிப் ஆட்கள், ‘இரத்தக்குழு’ என்றழைக்கப்படுகின்ற அளவிற்கு அடக்குமுறைக் கணைகளை அவர்கள்மீது ஏவினர்.

விடுதலை இயக்கம் —போராட்டம் என்றைக்கும் தோற்றதில்லை. அதற்கிணங்கவே, ஆலந்து நாடும் 1609-ம் ஆண்டில் விடுதலை லட்சியத்தை அடைந்தது, என்றுலும், 1648-ம் ஆண்டிலே தான், வெஸ்ட்பாலியா சமாதான உடன்படிக்கையின்படி, ஸ்பெயினின் முழு இணக்கத்தோடு சட்ட பூர்வமான விடுதலையை ஆலந்து சுவைத்தது.

இந்த விடுதலைப் போராட்ட நேரத்தில் பலப்பல அடக்குமுறைக் கொடுமைகளை ஆலந்து நாட்டு விடுதலைப் படையினர் தாங்கிக்கொண்டதோடு,கொடுஞ்சொற்களையும் மன நிறைவோடு ஏற்றுக் கொண்டனர். ஸ்பெயின் நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட நிர்வாகிகள், ஆலந்து நாட்டு விடுதலை வீரர்களைப் “பிச்சைக்காரர்கள் இவர்கள்! இவர்களைக் கண்டா அஞ்சி விடுவோம்?”என ஆணவ மொழி பேசினர். அதிலிருந்து, விடுதலை முரசு கொட்டும் ஆலந்து வீரர்கள், பிச்சைக்காரர்கள் என்றே தங்களை அழைத்துக் கொண்டனர். கடலிலே போராடியவர்கள் தங்களை ‘கடற் பிச்சைக்காரர்கள்’ என்று பெயரிட்டுக் கொண்டனர். விடுதலைப் போராட்டத்தின் சின்னமாக, குறியாக, அனைவருமே ‘திருவோட்டை’ சட்டைகளில் பொறித்துக் கொண்டனர். வெறி பிடித்து, ஆணவத் திமிரால், அதிகார மமதையால் விடுதலைச் சீயங்களை—இலட்சியச் செம்மல்களைப் ‘பிச்சைக்காரர்கள்’ என்ற கூறினர் ஏகாதிபத்தியவாதிகள்! விடுதலைப் படையினரோ தூற்றலால் துவளவில்லை; சாயவில்லை! மாருக, அதையே தங்கள் இடுகுறிப் பெயராகக் கொண்டு, அத்திருவோட்டையே விடுதலைச் சின்னமாக அணிந்து போராட்டத்தை நிறுத்தாமல் ஆலந்து நாட்டின் விடுதலைக் கொடியை வெற்றிக் கொடியாய் வானளாவப் பறக்க விட்டனர்.

அந்தோ! காமராஜரும் அந்தப் பழம் பாதையிலே செல்லுகின்றுர். கடுஞ் சொற்களால் இலட்சியம் மாசுருது! சட்டமன்ற மோனகுரு காமராஜர், இப்பழஞ் சரிதம் உணர்ந்து, விடுதலைப் பட்டாளத்தை மட்டரக வருணனைகளும் நஞ்சு தோய்ந்த சொற்களும் வீழ்த்தாததோடு வெற்றிதான் அவர்களைத் தழுவும் என்பதை அறியட்டும்!

பழஞ் சரிதம் காமராஜருக்கு விளங்காது, ஆனுல், சொந்தக் கட்சி அனுபவங்களையுமா அவர் மறந்தார்? காந்தியாரை ஏகாதிபத்திய ஆட்சித் தலைவன் பக்கிரி என்றுதான் கூறினுன். ஆனுல், காந்தியாரின் எண்ணம் மடியவில்லை. மமதை பிடித்த ஆங்கிலேய ஏகாதிபத்தியம்தான் சரிந்தது; ஒழிந்தது. அதைப் போலவே, வடநாட்டின் ஏகாதிபத்தியம் ஒழிந்து திராவிடம் கிட்டும் என்பதை காமராஜர் உணர்ந்து நல்வழிப்படுவாராக!

★ ★ ★